


15.07.2024

தலைப்புச் செய்திகள்

1. தமிழக ஊரக பகுதிகளில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

2. காவிரி விவகாரம் தொடர்பாக சென்னையில் சட்டமன்ற கட்சி தலைவர்கள் கூட்டத்திற்கு நாளை தமிழக அரசு அழைப்பு விடுத்துள்ளது.

3. தமிழ்நாட்டில் பொறியியல் படிப்பிற்கான கலந்தாய்வு வரும் 22 ஆம் தேதி தொடங்கும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி அறிவித்துள்ளார்.

4. நீட் தேர்வின் மூலம் பயனடைந்த தமிழக மாணாக்கரின் எண்ணிக்கை குறித்த வெள்ளை அறிக்கையை மாநில அரசு தாக்கல் செய்ய வேண்டும் என்று பி.ஜே.பி மாநில தலைவர் திரு.அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

5. குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க இன்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் ஊரக பகுதிகளில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர் பயன்பெறும் வகையில் தமிழக அரசின் காலை உணவு திட்ட விரிவாக்கத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

திருவள்ளூர் மாவட்டம் கீழச்சேரி புனித அன்னாள் அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளியில் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளான இன்று 1 முதல் 5ஆம் வகுப்பு மாணாக்கர் பயன்பெறும் வகையில் காலை உணவு வழங்கி இந்த திட்டத்தை தொடங்கிவைத்தார்.

இதன்மூலம் மாநிலத்தில் உள்ள 2 லட்சத்து 23 ஆயிரத்து 536 மாணாக்கர் பயன்பெறுவர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர் காலை உணவின் தரத்தை அமைச்சர்களும், அதிகாரிகளும் தொடர்ந்து உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

வாய்ஸ்

காலை உணவு விரிவாக்க திட்டத்தை மாநிலத்தின் இதர பகுதிகளில் அமைச்சர்கள் துவக்கிவைத்தனர்.

திருச்சி திருவெறும்பூர் அசூர் அரசு உதவி பெறும் பள்ளியில் மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இதனை தொடங்கிவைத்தார்.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் கண்டவராயன்பட்டி நடுநிலைப்பள்ளியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் இதனை தொடங்கிவைத்தார்.

தூத்துக்குடி மாவட்டம் மாப்பிள்ளையூரணி ஊராட்சி ஆரோக்கியபுரம் தொடக்கபள்ளியில் மாநில அமைச்சர் திருமதி கீதாஜீவன் இத்திட்டத்தை தொடங்கிவைத்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

காமராஜர் மாலை அணிவித்தல்

முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜரின் 122ஆவது பிறந்த நாளை ஒட்டி புதுதில்லியில் காமராஜர் திருவுருவ படத்திற்கு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் இன்று மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

கல்விக்கண் திறந்த காமராஜரின் பிறந்த நாளில் காலை உணவு திட்டம் விரிவுபடுத்தப்பட்டதாக முதலமைச்சர் தமது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார்.

விருதுநகரில் காமராஜர் மணிமண்டபத்தில் அன்னாரது திருவுருவ சிலைக்கு மாநில அமைச்சர்கள் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமசந்திரன், திரு.தங்கம் தென்னரசு உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

விருதுநகரில் உள்ள காமராஜரின் இல்லத்தில் செய்திமக்கள் தொடர்புத்துறை சார்பில் ஆட்சியர் திரு.ஜெயசீலன் அன்னாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ஞஞஞஞஞஞஞஞஞஞஞஞ

முதலமைச்சர் காவிரி

காவிரி விவகாரம் தொடர்பாக சென்னை தலைமை செயலகத்தில் நாளை காலை 11 மணிக்கு அனைத்து சட்டமன்ற கட்சி தலைவர்களின் கூட்டத்திற்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் தலைமையில் நடைபெற உள்ள இந்த அனைத்துக்கட்சி கூட்டத்தில், காவிரி நீரை பெற, தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது குறித்து முடிவெடுக்கப்படும் என்றார்.

அனைவரையும் கலந்தாலோசித்து, சட்ட வல்லுநர்களின் கருத்துக்களை பெற்று, தமிழக அரசு மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து, இதில் ஆராயப்படும் என்றார்.

காவிரி நீர் மேலாண்மை ஆணையம் வரையறுத்துள்ளபடி தமிழகத்திற்கு நாளொன்றுக்கு ஒரு வு.ஆ.ஊ தண்ணீரை விடுவிக்க இயலாது என்று கர்நாடக அரசு தெரிவித்திருப்பது அதிர்ச்சி அளிப்பதாக அவர் கூறியுள்ளார்.

கர்நாடகத்தின் இச்செயல் உச்சநீதிமன்ற ஆணையை மீறுவதாகும் என்று கூறியுள்ள அவர், இந்நடவடிக்கையால் தமிழக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்றும் தெரிவித்தார்.

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் உத்தரவை உடனடியாக செயல்படுத்த தமிழக அரசு இந்த அமைப்பிற்கு கடிதம் எழுதியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கர்நாடகாவின் 4 முக்கிய அணைகளின் நீர் இருப்பு 75.586 வு.ஆ.ஊ -யாக உள்ள நிலையில் மேட்டூர் அணையில் வெறும் 13.808 வு.ஆ.ஊ தண்ணீர் மட்டுமே உள்ளதாக முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பொன்முடி

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்பிற்கான கலந்தாய்வு வரும் 22 ஆம் தேதி தொடங்கும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பசிய அவர், செப்டம்பர் 11ஆம் தேதிவரை நடைபெறும் இக்கலந்தாய்வு 69 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நடைபெறும் என்றார்.

இதன்படி வரும் 22, 23ஆம் தேதிகளில் 7.5 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவ வீரர்கள் விளையாட்டு பிரிவினருக்கான கலந்தாய்வு நடைபெறும் என்று கூறியுள்ளார்.

வரும் 25 முதல் 27 வரை பொது சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு மாற்றுத்திறனாளிகள், முன்னாள் ராணுவத்தினர் விளைாட்டு பிரிவினருக்கு நடைபெறும் என்று தெரிவித்தார்.

வரும் 29 ஆம் தேதி முதல் செப்டம்பர் 3 ஆம் தேதிவரை பொதுபிரிவினருக்கான கலாந்தாய்வு நடைபெறும் என்றார்.

6 முதல் 8 ஆம் தேதி வரை ஆன்லைனில் துணை கலந்தாய்வு நடைபெறும் என்று தெரிவித்தார்.

பாலிடெக்னிக் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இந்தாண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

வாய்ஸ்

6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் பயின்று உயர்கல்வியை தொடரும் மாணாக்கருக்கு இந்தாண்டு முதல் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

அண்ணாமலை

தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் நீட் தேர்வின் மூலம் பயனடைந்த மாணாக்கரின் எண்ணிக்கை குறித்த வெள்ளை அறிக்கையை மாநில அரசு தாக்கல் செய்ய வேண்டும் என பி.ஜே.பி மாநில தலைவர் திரு.அண்ணாமலை கேட்டுக்கொண்டுள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் பிரதமரின் வேளாண் நிதி உதவி திட்டத்தில் 22 லட்சம் விவசாயிகள் நீக்கப்பட்டதை கண்டித்து பி.ஜே.பி சார்பில் சட்டமன்றதொகுதி வாரியாக குறைதீர்க்கும் கூட்டம் நடத்தப்படும் என்று கூறியுள்ளார்.

புதிய கல்வி கொள்கையில் மாணாக்கருக்கு காலை உணவு வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டிய அவர், மத்திய அரசின் புதிய கல்வி கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்துவிட்டு அதில் உள்ள அனைத்து அம்சங்களையும் மாநில கல்விக்கொள்கை பெயரில் திமுக வெளியிட்டிருப்பதாக குற்றம் சாட்டினார்.

தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் காலியாக உள்ள 19 ஆயிரம் பணியிடங்கள் குறித்து அரசு அக்கறை செலுத்தவில்லை என்றும் குறைகூறியுள்ளார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத்தலைவர் கொலை தொடர்பாக உள்துறை அமைச்சகம் தமிழக அரசிற்கு விளக்கம் கேட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

முன்னதாக நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தை அடுத்த அத்தனூர் தாளம்பள்ளம் பகுதியில் பிஜேபி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திரு.அண்ணாமலை பங்கேற்றார்.

மத்திய அரசின் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அதிக அளவில் நடத்தப்படும் என்று அவர் கூறினார்.

காலநிலை மாற்றம், வறுமை ஒழிப்பு சவால்களை எதிர்கொள்ள இந்தியாவும் மார்ஷல் தீவு நாடும் இணைந்து செயலாற்றுவதன் அவசியத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

விக்ரம் மிஸ்ரி

மத்திய வெளியுறவுத்துறை செயலராக திரு.விக்ரம் மிஸ்ரி இன்று பொறுப்பேற்றார்.

இதுவரை இந்த பதவியை வகித்த திரு.வினய் மோகன் குவாத்ராவின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவடைந்ததை அடுத்து திரு. விக்ரம் மிஸ்ரி புதிய செயலராக இன்று பதவி ஏற்றுக்கொண்டார்.

தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகத்தின் துணை பாதுகாப்பு ஆலோசகராக அவர் பணியாற்றிவந்தார்.

1997 ஆம் ஆண்டு திரு. ஐ.கே. குஜ்ரால்,

2012ஆம் ஆண்டு டாக்டர் மன்மோகன்சிங்,

2016ஆம் ஆண்டு திரு.நரேந்திரமோடி ஆகிய 3 பிரதமர்களுக்கு அவர் தனிச்செயலராக பணியாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஜெய்சங்கர்

இந்திய - மார்ஷல் தீவுகளுக்கிடையே நிலவிவரும் நட்புறவு தொடர்ந்து மேம்பட்டு வருவதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மார்ஷல் தீவில் இந்திய நாட்டின் சார்பில் 4 சமூக மேம்பாட்டு திட்ட செயலாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்த கையொப்ப நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர், நீடித்த வளர்ச்சிக்கான கொள்கையின் ஒருபகுதியாக, பசுபிக் பிராந்தியத்தில் உள்ள தீவுகளுக்கு ஆதரவு வழங்குவதை முக்கிய பொறுப்பாக இந்தியா கருதுகிறது என்றார்.

காலநிலை மாற்றம், இயற்கை பேரிடர்கள், வறுமை ஒழிப்பு, சுகாதாரம் போன்ற சவால்களை எதிர்கொள்ள இருநாடுகளும் இணைந்து செயலாற்றுவதன் அவசியத்தையும் டாக்டர் ஜெய்சங்கர் எடுத்துரைத்தார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சேகர்பாபு

தமிழகத்தில் மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையில் அம்மன் திருக்கோவில்களுக்கான ஆடி மாத முதற்கட்ட ஆன்மீக பயணம் வரும் 19ஆம் தேதி தொடங்கும் என்று மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்திருக்கிறார்.

சென்னை, திருச்சி, கோவை மதுரை நெல்லை தஞ்சை மண்டலங்களில் இந்த ஆன்மீக பயணம் நடைபெறும் என்றார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

மகளிர் உரிமைத்தொகை

தமிழ்நாட்டில், மகளிர் உரிமைத்தொகை கோரி விண்ணப்பித்த மேலும், ஒரு லட்சத்து 48 ஆயிரம் மகளிருக்கு அவர்தம் வங்கி கணக்குகளில் ஆயிரம் ரூபாய் வரவு வைக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

மகளிர் உரிமைத்தொகைக்காக நடப்பு நிதியாண்டில், 13 ஆயிரத்து 722 கோடிக்கும் அதிகமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

குற்றாலம்

குற்றாலத்தில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

நீலகிரி, கோவை மாவட்டங்களில் இன்று மிக கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிரு‘ணகிரி, தர்மபுரி, சேலம், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஒகேனக்கல்

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 4 ஆயிரத்து 500 கன அடியாக உள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கால்பந்து

ஜெர்மனியில் நடைபெற்ற யூரோ கோப்பை கால்பந்து போட்டியில் ஸ்பெயின் 4ஆவது முறையாக சேம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளது.

நள்ளிரவு நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் - இங்கிலாந்தை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து வெற்றிபெற்றது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது